# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்




பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | தை -29 | 12-02-2004 | வியாழக்கிழமை | ஓசை-359

# ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின்
# 39 அமைச்சர்கள் சனாதிபதியால் பதவி நீக்கம்

## அமைச்சு வாகனங்களையும் மீளளிக்க உத்தரவு

(கொழும்பு)

**அமைச்சரவை அந்தஸ்த்து அற்ற 27 அமைச்சர்களும் 12 பிரதி அமைச்சர்களுமாக 39 பேர் சனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அமைச்சிற்குரிய வாகனங்களையும் அமைச்சுச் செயலாளர்களிடம் மீளளிக்குமாறும் சனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.**

கடந்த 7ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்ட நேரத்தில் இருந்து இந்த உத்தரவு அமுல் செய்யப்படுவதாக சனாதிபதியின் செயலகம் அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் 12 பிரதி அமைச்சர்களும், 27 அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்களும் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பில் தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தியே சனாதிபதி இதனைச் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதாவது மேற்படி அமைச்சர்கள் தமது பதவிகளைக் கொண்டு அடுத்துவரும் தேர்தலில் போட்டியிடக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாலேயே இந்த நடவடிக்கையை

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி.யின் தேர்தல் பிரச்சாரத்திற்கு 13.8 கோடி ரூபா சனாதிபதி வழங்கினார்

### டக்ளசிற்கு தேசியப் பட்டியலில் எம்.பி. பதவி?

ஈ.பி.டி.பி அமைப்பினரின் தேர்தல் பிரச்சார செலவிற்காக சனாதிபதி சந்திரிகா13 கோடியே 80 லட்சம் ரூபாவை டக்ளஸ் தேவானந்தாவிடம் வழங்கியுள்ளார்.

வரும் பொதுத்தேர்தலில்போட்டியிடவுள்ள ஈ.பி.டி.பியினர்சிறி.சு. கட்சிக்கு ஆதரவளிக்கவுள்ளனர்.

இதேவேளை டக்ளஸ்தேவானந்தாவை சிறி.சு.கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் உள்வாங்கப்படுவார். என்றும் கொழும்பு அரசியல் ஊடகங்களிலிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை மலையகத்தில் இ.தொ.கா.விருந்து பிரிந்து சென்ற சதாசிவத்திற்கும் தேர்தல் பிரச்சாரத்திற்கென ஒரு தொகைப் பணத்தை சனாதிபதி வழங்கியுள்ளார். (32)

## பாராளுமன்றத்தைக் கலைத்தமை மீண்டும் யுத்தத்திற்கான அழைப்பாகும்

### நீதிக்கும் சமாதானத்திற்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் போசகர்

(கொழும்பு)

பெரும்பான்மை பலத்துடன் விளங்கிய இலங்கையின் பாராளுமன்றத்தைக் கலைத்தமை முறையற்ற ஒரு நடவடிக்கை என இலங்கையின் நீதிக்கும், சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் போசகரும், ஏழு கோரளைகளின் தாம நிலையத்தின் தலைவருமான வண. மா. கடவல புஞ்ஞதாரதேரர் தெரிவித்துள்ளார்.

20 வருட கால யுத்தம் ஓய்ந்த நிலையில், கடந்த இரண்டு வருடங்களாக இலங்கையின் சமாதானத்தின் உறுதி நிகழ்த்தப்பட்டன. இந்நிலையில் பாராளுமன்றக் கலைப்பானது மீண்டும் யுத்தத்திற்கான அழைப்பு என்ற ஐயம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்போது அனைவரும் தங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். ஆனால், தேசப்பற்று எனக் கூறிக்கொள்ளும் சிலர் சமாதான முயற்சிகளைக் குழப்பி நாட்டை நாசம் செய்ய முயல்கின்றனர். இப்படிப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஆனந்தசங்கரியின் அனுமதியின்றி கட்சிக்கூட்டத்தைக் கூட்டமுடியாது

### –நீதிமன்ற உத்தரவு மார்ச் 16 வரை நீடிப்பு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியின் அனுமதியின்றி எந்தஒரு கூட்டத்தையும் தமிழர் விடுதலைக் கூட்டணி நடத்தக்கூடாது எனக் கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்த மனு மீதான தடை உதரவு மார்ச் 16ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனு மீதான விசாரணை நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஏற்கனவே இரண்டு தடவைகள் இந்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மீண்டும் மார்ச் 16ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பதவியிலிருந்து மிலிந்த மொறகொட இராஜினாமா

(கொழும்பு)

அமைச்சர் மிலிந்தமொறகொட இராஜினாமாக் கடிதம் ஒன்றை நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கலுக்கான பிரதி அமைச்சுப் பதவியை இழந்த நிலையில் தான் அமைச்சுப் பதவியை வகிப்பதில் எவ்வித பயனுமில்லை என்று மிலிந்த மொறகொட தனது இராஜிநாமாக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் தன்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு நன்றி தெரிவித்துள்ள அவர் தமக்கு வாய்ப் பளிக்கப்பட்டால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் தெரிவு செய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இராஜிநாமாக் கடிதத்தை பிரதமர் ஏற்றுக் கொண்டாரா? இல்லையா என்ற தகவல் எதுவும் வெளியாக

(8ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸ் அரசபிரதிநிதிகள் குழு இன்று கிளிநொச்சிக்கு விஜயம்

(அலுவலக செய்தியாளர்)

சுவிஸ்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அந் நாட்டு அரச பிரதிநிதிகள் உள்ளிட்ட15 பேர் கொண்ட அணியினர் கிளிநொச்சி வருகைதரவுள்ளனர்.

இன்று காலை கிளிநொச்சியை வந்தடையும் மேற்படி குழுவினர், கிளிநொச்சி மாவட்டத்தின் நிலவரம் தொடர்பாக கிளி.அரச அதிபர் இராசநாயகம் அவர்களை சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

அரச அதிபர் அவர்களைச் சந்தித்த பின்னர் குழுவினர் தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணிமனைக்குச் சென்று புனர்வாழ்வுக் கழக பிரதிநிதிகளை சந்தித்து புனர்வாழ்வுக் கழகத்தின் பணிகள் தொடர்பாக கேட்டறிவதுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுவிஸ்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி மீனவர் மீது சிறி.கடற்படை தாக்கு

(வடமராட்சி)

வடமராட்சி இன்பருட்டி கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படும் இரு மீன்பிடிப் படகுகளில் இருந்த 11 இந்திய மீனவர்கள் நேற்று நள்ளிரவு உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்டனர்.

மேற்படி கடற்பரப்பில் சிறுபடகுகளில் அத்துமீறிப் பிரவேசித்து உள்ளூர் மீனவர்களின் வலைகளைக் கொள்ளையடித்தும் வளங்களைச் சுரண்டிச் சென்றதாகவும் குற்றஞ்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சுவீடன் வெளிவிவகார அமைச்சின் இராஜதந்திரிகளுடன் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் பேச்சு

(லண்டன்)

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் இரவு சுவீடனுக்குச் சென்றனர்.

அங்கு சுவீடன் வெளிவிவகார அமைச்சின் இராஜதந்திரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகள் குறித்தும் இவற்றுக்கான சர்வதேச உதவிகள் குறித்தும் அரசியல்துறை பொறுப்பாளர் கலந்துரையாடியுள்ளார்.

சுவீடனின் வெளிவிவகார அமைச்சகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் வடக்கு-கிழக்கு மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை அதிகரிப்பதற்குத் தாம் முயற்சிப்பதாக சுவீடனின் இராஜாங்க அமைச்சின் செயலாளர் அனிகா சோடர் வாக்குறுதி அளித்துள்ளார்.

இதேவேளை சு.ப தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் இன்று இத்தாலிக்கும் பின்னர் அயர்லாந்துக்கும் பயணமாகவுள்ளனர்.



# கிளி. மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளன செயலகம் நேற்று திறப்பு



(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளனச் செயலகம் நேற்று பகல் 11.00 மணிக்கு யாழ்சாலை பரந்தன் நெற்பண்ணை வளாகத்தில் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பெற்றது.

கிளி.மாவட்ட கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்தலைவர். மனோகரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பொதுச் சுடரினை மாவீரர் மேஜர் இரத்தினத்தின் தந்தை சுப்பிரமணியம் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் மதன்ராஜ் ஏற்றி வைத்தார். சம்மேளனக் கொடியினை கமநலசேவை உதவி ஆணையாளர் இராசலிங்கம் ஏற்றிவைத்தார். மங்கல விளக்கேற்றலினைத்தொடர்ந்து சம்மேளனத்தின் பெயர் பலகையினை கிளி.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர்திருமதி ஆனந்தராஜா திரைநீக்கம் செய்துவைக்க கிளி. மாவட்ட கமக்கார அமைப்புக்களின் புதிய சம்மேளனச் செயலகத்தினை கிளி . அரச அதிபர் தி.இராசநாயகம் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.


மேற்படி நிகழ்வில் கிளி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன், கிளி. பிரதேச செயலர் பொன் நித்தியானந்தம், கிளி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் செந்தில், கிளி. மாவட்ட கால்நடை வைத்தியர், கியூடெக் நிறுவன கிளி., முல்லை. மாவட்ட இணைப்பாளர், நீர்பாசன எந்திரி கந்தசாமி கணேசபிள்ளை, வன்னி வேளான் சேவை பொதுமுகாமையாளர் புவனேந்திரன், உள்ளூராட்சி உதவி ஆணையர் தனபாலசிங்கம், நிக்கொட் நிறுவன உதவித் திட்டப் பணிப்பாளர் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் கமக்கார அமைப்பு பிரதிநிதிகள் பெருமளவில் கலந்து நிகழ்வினை சிறப்பித்தனர்.(சோ)

# உருத்திரபுரத்தில் புனரமைக்கப்பட்ட மத்திய மருந்தக மகப்பேற்று மனை திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

புனரமைக்கப்பெற்ற கிளி.உருத்திரபுரம் மத்திய மருந்தக மகப்பேற்றுமனை திறப்பு வைபவமும் புதிய மகப்பேற்று விடுதிக்கான அடிக்கல் நாட்டும் வைபவமும் உருத்திரபுரம் மருந்தக வைத்திய அதிகாரி மு.கோபாலபிள்ளை தலைமையில் நடைபெற்றது.





நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கேற்றலினைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி நகர அரசியல் துறையைசேர்ந்த திருமாறன் ஏற்றி வைத்தார் அடுத்து புனரமைக்கப் பெற்ற மகப்பேற்று மனையினை கிளி.மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி நாடாவினை வெட்டித் திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து புதியமகப்பேற்று விடுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம் பெற்றது.

கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு விடுதிக்கான அடிக்கல்லினை நாட்டிவைத்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க செயலர் கணேசபிள்ளை கட்டடக் கலைஞர் சிற்பரன், கணக்காளர் பூவேந்திரராசா, சிவநகர் கிராம சேவை அலுவலர் அருந்தமிழ்ச் செல்வன் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் பொது மக்கள் கலந்து நிகழ்வினை சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கிளி. தருமபுரம் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி

(கண்டாவளை)

கிளி/தருமபுரம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்று முன்தினம் வித்தியாலய முதல்வர் திரு.த. பூலோகராஜா தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் மங்கல விளக்கை களீ/ வலயத்திட்டமிடல்ப் பணிப்பாளர் திரு. ம.பத்மநாதன், கண்டாவளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் வி.சிற்றம்பலம் அவர்களும் ஏற்றினர். தமிழீழத் தேசியக் கொடியை விசுவமடுப் பிரதேச அரசியல்த் துறைப் பொறுப்பாளர் சி.செழியன் ஏற்றினார். தொடர்ந்து பாடசாலைக் கொடி, இல்லக் கொடிகள் என்பன ஏற்றப்பட்டன அடுத்து விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

விளையாட்டு நிகழ்வின் முடிவில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கு கரைச்சிப் பிரதேச பதிவாளரும், சமாதான நீதவானுமாகிய திருமதி இந்திரா பத்மநாதன் பரிசில்களை வழங்கி கௌரவித்தார் இப் போட்டியில் நீல நிறத்தையுடைய இளங்கோ இல்லம் 456 புள்ளிகளைப் பெற்று 1ஆம் இடத்தையும் வள்ளுவர் இல்லம்(சிவப்பு, 439 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடததையும், கம்பன் இல்லம் (பச்சை)437 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்தையும் பாரதி இல்லம்(மஞ்சள்) 420 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும் பெற்றன. (14)

# வாகனப் பதிவு, சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான விண்ணப்பங்கள் கிளி.இல் ஏற்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் அனைத்து வாகனங்களுக்கும் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மற்றும் ஆவணங்கள் தவறவிடப்பட்ட அனைத்து வாகனங்களைப் பதிவு செய்வதற்குமான நடவடிக்கைகளும், எதிர்வரும் 21ஆம் 22ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையினை கிளிமாவட்டச் செயலகத்திலுள்ள மோட்டார் போக்குவரத்துக் கிளையினர் மேற்கொண்டு வருகின்றனர். எனவே கிளிநொச்சி மாவட்டத்தினை நிரந்தரமாகக் கொண்ட விண்ணப்பதாரிகளை 16ஆம் திகதிக்கு முன்பாக கிளி. மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் விண்ணப்பங்களை ஒப்படைக்கும் வண்ணம் கிளி அரச அதிபர் தி. இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ)


## வரி விளம்பரம்

### ஆசிரியர் போட்டிப் பரீட்சை ஆரம்பம்

இடம் கிளி/ அக்கராயன் ம.வி. காலம் 14-02-2004 சனி ஞாயிறு காலை 9.30 மணி. தொடர்பு: அதிபர் கிளி/ அக்கரா யன் ம.வி. (4234)

### தவறிவிட்டது

சுந்தரமூர்த்தி கோபிதாஸ் (கோபி. மாஸ்ரர்) என்பவருடைய அடையாள அட்டையும் (681040609V) இரண்டு திறப்பும் அடங்கிய கைப்பேஸ் மூங்கிலாறுக்கும் உடையார்கட்டுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனை அல்லது புதுக் குடியிருப்பு தாஸ் லேந்தில் ஒப் படைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4230)

### சிங்கள வகுப்புகள் ஆரம்பம்

ஆண்டு 5 மாணவர்கள் தொடக்கம் அரச உத்தியோகத்தர்கள் வரை சிங்களத்தில் சரளமாகப் பேச,எழுத,வாசிக்கக் கூடியதான புதிய வகுப்புகள் 2004.02.15 ஞாயிறு காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு மாவீரர் படிப்பகம் முன்பாக அமைந்துள்ள K.S.K கணினி பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளன. ஆசிரியர்:- திரு.A.தேவசகாயம் (ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி) நிர்வாகம். (சி.8771)

## அறிவித்தல்

துரை பல்பொருள் வாணிபத்தில் திருத்தவேலைக்காகத் தரப்பட்ட மணிக்கூடுகளைத் எதிர் வரும் 25. 02. 2004க்குள் மீளப்பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மறந்தவறும் பட்சத்தில் நாங்கள் பொறுப்பானவர் கள் இல்லை என்பதனையும் தெரியப்படுத்துகின்றோம்.

(4228) - உரிமையாளர்.



## தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் வன்னி

ஓட்டுநர் பணி செய்யும் ஓட்டுநர்கள்

தமிழீழ ஓட்டுநர் உரிமம் பெற்றுக் கொள்வதற்கான

## விண்ணப்பம் கோரல்

23அகவைக்கு மேற்பட்ட தமிழீழ ஓட்டுநர் உரிமம் பெறவுள்ள "ஓட்டுநர் பணி செய்யும் ஓட்டுநர்கள்" கீழே உள்ள விபரத்துடனான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

- முழுப் பெயர்:-
- நிலையான முகவரி:-
- தற்காலிக முகவரி:-
- குடும்ப அட்டை இலக்கம்:-
- அடையாள அட்டை இலக்கம்:-
- பிறந்த ஆண்டு, மாதம், திகதி:-

விண்ணப்ப முடிவு நாள்
**29-02-2004**

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**சு. மனோகரன்**
(தலைவர்)
தனியார் பேருந்து உரிமையாளர் கழகம்,
வன்னி,
புதுக்குடியிருப்பு.

(4231)



## மு/ புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சபை

## பொதுக்கூட்டம் 2004

இடம்:-மு/புதுக்குடியிருப்பு ம.வி. மண்டபம்
திகதி:-26.02.2004
நேரம்:-பி.ப 3.00

*2004 ஆம் ஆண்டுக்கான புதிய தெரிவும், பாடசாலை அபிவிருத்தி,பொன்விழா பற்றிய விடயங்களும் ஆராயப்படவுள்ளதால் அனைத்து பெற்றோர்களையும், நலன் விரும்பிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.*

குறிப்பு:- 25.02.2004 க்கு முன் இவ்வருடத்திற்கான சந்தாப் பணத்தை செலுத்தியவர்கள் மாத்திரமே நிர்வாக சபையில் அங்கத்தவராக உரித்துடையவராவர்.

(3983) **பாடசாலை அபிவிருத்தி சங்கம்**



## பணிநிலை வெற்றிடம்

**செக்கொட் தனியார் நிறுவனம்**
**இல.74 இரத்தினபுரம்**
**கிளிநொச்சி**

மேற்படி எமது நிறுவனத்தில் பின்வரும் பணிநிலைகளுக்கான வெற்றிடங்கள் கோரப்படுகின்றன:

01. வேலைத்திட்ட இணைப்பாளர் தகைமைகள்:-
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி
ஆங்கில அறிவு
கணினி அறிவு
மேற்படி வேலை தொடர்பான முன்அனுபவம் விரும்பத்தக்கது.

02. மின்கம்பி இணைப்பாளர்
03. கட்டட நிர்மாண வேலையாளர்(மேசன்)
பணிநிலை (2) (3) ற்கு அவ்வேலை தொடர்பான முன்னனுபவம் விரும்பத்தக்கது.

* வயதெல்லை 20-45
* சம்பளம் நேரில் பேசித்தீர்க்கப்படும்.

தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தகைமைச்சான்றுகளுடன் 16.02.04 அன்று மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 5.00 மணி வரை மேற்குறித்த முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.

(4232)

# ஈராக்கிற்கு மேலதிக படைகளை அனுப்பும் தென்கொரிய முயற்சிகள் இடைநிறுத்தம்!

## -மக்களின் எதிர்ப்பையடுத்து தீர்மானம்

(சியோல்)

**ஈராக்கிற்கு மேலதிக படையினரை அனுப்பும் முடிவை தென்கொரியா தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது. உள்நாட்டில் ஏற்பட்டுள்ள எதிர்ப்புகளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கையை அரசு இடைநிறுத்தியுள்ளது.**

ஈராக்கில் ஏற்கனவே நிலை கொண்டுள்ள படையினருக்கு உதவியாக அங்கு மேலதிக தென்கொரிய இராணுவத்தினர் அனுப்பப்படுவதற்கு வழிவகுக்கும் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதை தென்கொரிய பாராளுமன்றம் நேற்று முன்தினம் தாமதப்படுத்தியுள்ளது.

தென்கொரியப் படையினர் ஈராக் அனுப்பப்படுவதை எதிர்த்து தலைநகர் சியோவில் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியமையினாலேயே தென்கொரிய பாராளுமன்றம் சட்டமூலம் நிறை வேற்றுவதை தாமதப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலுள்ள ஈராக்கில் அமெரிக்கப்படைகளது தேவைக்கேற்ப யப்பான் இதுவரை நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது.

ஆயினும் இவ்விடயத்தில் தென்கொரியா அமெரிக்காவின் தேவைக்கேற்ப உடனடியாக செயற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறு இருக்க ஈராக்கின் மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளில் அமெரிக்காப்படைகளுக்கு உதவி செய்வதற்காக யப்பானியப் படையினரின் ஒரு பகுதியினர் ஈராக் செல்வதற்கு தேவையான சட்டரீதியான விடயங்களை யப்பானிய பாராளுமன்றம் நேற்று முன்தினம் பூர்த்தி செய்துள்ளது.

யப்பானிய பாராளுமன்றத்தின் கீழ்ச்சபை கடந்த மாத இறுதியில் அனுமதியை வழங்கியிருந்தது. தற்போது மேற்சபையும் அதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

போரில் ஈடுபடாது மனிதாபிமான பணிகளில் ஈடுபடும் பொருட்டே யப்பான் படைகளை ஈராக்கிற்கு அனுப்புகின்றமை தெரிந்ததே.



குவைத் எல்லையைக் கடந்து ஈராக்கிற்குள் செல்லும் ஜப்பானிய உதவிப்படைகள் (இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஜப்பானின் படைகள் வெளிநாடொன்றுக்கு செல்வது இதுவே முதல் தடவை)

# சட்டமூலம் ஏற்பு

(பாரிஸ்)

பிரான்ஸ் பாடசாலைகளில் மதச்சின்னங்களை அணிவதை தடை செய்யும் சட்டமூலம் ஏற்றுக் கொள்ளபட்டுள்ளது.

தேசிய அரச பேரவையில் நேற்றுமுன்தினம் சர்ச்சைக்குரிய இந்தச்சட்டமூலம் நிறைவேற்றுபட்டுள்ளது.

# அணுவாயுத பிரச்சினையில் இஸ்ரேலுக்கும் கவலை!

(டெல்அவிவ்)

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள அணுவாயுத பிரச்சினை தொடர்பாக கவலை தெரிவித்துள்ள இஸ்ரேல் அல்ஹைதா போன்ற பயங்கரவாத அமைப்புக்களின் கையில் அணுவாயுதங்கள் சென்றடையும் வாய்ப்புகள் குறித்து தனது அச்சத்தை வெளியிட்டுள்ளது.

இந்தியா உட்பட சனநாயக நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து அத்தகைய முயற்சிகளை இல்லா தொழிக்க முயற்சி செய்ய வேண்டும் எனவும் அது கூறியுள்ளது. அத்துடன் மிக விரையில் இஸ்ரேல் தூதரகம் ஒன்று மும்பாயில் திறக்கப்படும் என இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# ஈராக்கில் மீண்டும் கார்க்குண்டு வெடிப்பு இராணுவ அலுவலகம் முன் 25 பேர் பலி!

## - 24 மணிநேரத்தில் இரண்டாவது சம்பவம்

ஈராக்கின் புதிய இராணுவ அலுவலகம் முன்பாக கார்க் குண்டு வெடித்துள்ளது. இதில் 25 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். இச்சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது.

24மணித்தியாலங்களுக்குள் ஈராக்கில் நடந்த பாரிய கார்க்குண்டு வெடிப்பு இதுவாகும்.

நேற்று முன்தினம் பாக்தாத்தில் பொலிஸ் நிலையத்திற் முன்னால் கார்குண்டு வெடித்ததில் 50 பேர் கொல்லப்பட்டனர். 75க்கும் அதிகமாக காயமடைந்தனர்.

# அணுவாயுத தொழில்நுட்ப பரிமாற்றம் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே தெரியும்

## -பாகிஸ்தான் சனாதிபதி கருத்து

பாகிஸ்தானின் உயர் விஞ்ஞானியான அப்துல் காதீர் கான் ஏனைய நாடுகளுடன் தனது நாட்டின் அணுவாயுத தொழில் நுட்பத்தை பகிர்ந்து கொள்வதாக கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே தான் சந்தேகித்ததாக பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் முதற்தடவையாகக் கூறியுள்ளார்.

எனினும் இது தொடர்பான ஆதாரங்களை அமெரிக்கா தனக்கு வழங்கவில்லையென அவர் மேலும் வாதிட்டுள்ளார்.

காதீர்கானின் நடவடிக்கைகள் குறித்த சான்றுகளை கடந்த வருடம் அக்டோபர் மாதம் தான் அமெரிக்க அதிகாரிகள் தனக்கு அளித்ததாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் அணுசக்தி துறையின் தந்தையான காதீர் கான் மற்றும் சில விஞ்ஞானிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட நிலையில் காதீர்கான் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அண்மையில் குண்டு வெடிப்பு நடைபெற்ற காத்மண்டு மாநகராட்சி அலுவலகத்துக்கு வெளியில் நடந்து செல்லும் நேபாளப் படையினர்

# மக்களவைத் தேர்தலை நடத்துதல் குறித்து தேர்தல் ஆணையகம் இன்று கூடிப் பேச்சு

## - பெப்ரவரி 17ந்கு பின்பே தேர்தல் திகதிகள் முடிவு

(புதுடில்லி)

மக்களவைத் தேர்தல் குறித்து தேர்தல் ஆணையும் மாநில அரசு உயர் அதிகாரிகளுடன் நடத்தவுள்ள மூன்று கட்டப் பேச்சுவார்த்தைகளில் முதல் கட்டப் பேச்சு வார்த்தை இன்று புதுடில்லியில் நடைபெறவுள்ளது. இதில் தமிழகம் உட்பட 15 மாநிலங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

வரும் மக்களவைத் தேர்தலை முன்னிட்டு வேட்பாளர்கள் குறித்து தேர்தல் ஆணையகம் மாநில அரசுகளுடன் கலந்தாலோசிக்க முடிவு செய்ததையடுத்தே மூன்று கட்டப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

தேர்தல் ஏற்பாடுகள் குறித்து மாநில அரசுத் தலைமைச் செயலர்கள் காவல்துறைத் தலைவர்கள் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுடனேயே இந்த ஆலோசனை நடைபெறவுள்ளது.

இதில் முதற்கட்டமாக இன்று புதுடில்லியில் தமிழ் நாடு உட்பட 15 மாநிலங்களின் அதிகாரிகளுடன் தேர்தல் ஆணையகம் தேர்தல் குறித்து விவாதிக்கவுள்ளது.

அடுத்தகட்டப்பேச்சு எதிர்வரும் 16ஆம் திகதியும் மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் 17ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இந்த மூன்று கட்டப்பேச்சுக்களிலும் தலைமைத் தேர்தல் ஆணையாளர் ரி.எஸ். கிருஸ்ண மூர்த்தி தேர்தல் ஆணையாளர்கள் கோபாலசுவாமி,டான்டன் ஆகியோரும் கலந்து கொள்கின்றார்கள்.

இதையடுத்து தேர்தல் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடத்தத் தேவைப்படும் துணை இராணுவப் படையினர் குறித்து மத்திய உள்துறைச் செயலகத்துடன் தேர்தல் ஆணையகம் விவாதித்தபின்னரே தேர்தல் திகதி முடிவு செய்யப்படவுள்ளது.

# கெயிட்டியில் பிரச்சினையைத் தீர்க்க அதிகாரத்தில் மாற்றம் அவசியம்

## -அமெரிக்கா வலியுறுத்து

கெயிட்டி பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் அந்நாட்டில் அதிகாரம் சம்பந்தமான வழிமுறைகளில் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென அமெரிக்கா நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

சிலவேளை சனாதிபதி அடிஸ்டைட் பதவி விலக வேண்டிவரலாமெனவும் கூறப்பட்டுள்ளது. வெளிவிவகார திணைக்களப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், கெயிட்டிபிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டியது அவசியமாகுமென கூறியுள்ளார். இதேவேளை கெயிட்டியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் கடமையாற்றும் இரண்டாம் மூன்றாம் நிலையிலுள்ள அதிகாரிகளை நாடு திரும்புமாறு அமெரிக்கா கூறியுள்ளது.

கெயிட்டியில் சனாதிபதிக்கு எதிராக அதிருப்தியாளர் போராட்டங்களை தீவிரப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



மேற்குக்கரை அச்சுட்ஸ் கிராமத்தை ஜெருசலேமிலிருந்து பிரிக்கும் இஸ்ரேலினால் நிர்மாணிக்கப்பட்ட சுவரை இடிக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் நடத்தும் பலஸ்தின மக்கள்.

# வீரப்பன் சுற்றிவளைப்பு சில தினங்களில் கைதாவார்!

## -கர்நாடகம் அறிவிப்பு

(பெங்களூர்)

வீரப்பனை கர்நாடக மற்றும் தமிழக அதிரடிப்படையினர் சுற்றிவளைத்திருப்பதாக கர்நாடக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இச்சுற்றிவளைப்பின் காரணமாக வீரப்பனுக்கு பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். பெங்களூரில் வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இன்னும் சில நாட்களில் வீரப்பன் கைது செய்யப்பட்டாரென இனிப்பான செய்தி மக்களுக்கு கிடைக்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழர்களின் ஒற்றுமையை வெளிப்படுத்த தேர்தலில் சிந்தித்து செயற்படுவோம்

## மக்கள் பெருமன்றம் அழைப்பு

(மட்டக்களப்பு)

**சிங்களப் பேரினவாதக் கட்சிகளில் தமிழர்கள் இணைந்து போட்டியிடுவது, பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்த்து தமிழர்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தவும் ஆட்சியைத் தீர மானிக்கக் கூடிய வாய்ப்பை உறுதிப்படுத்தும் வகையில் தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

சிங்களப் பேரினவாதக் கட்சிகள் ஓரணியில் திரண்டு இம்முறை தேர்தல் களத்தில் நிற்கின்றன. தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்காது இழுத்தடித்து தமிழர்களது விடுதலைப்போராட்டத்தை ஒடுக்க முற்படும் இந்த இனவாத சக்திகளுக்கு பதிலடியை வழங்கும் வகையில் தமிழர்களின் ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

கடந்த காலங்களில் சிங்கள தேசியக் கட்சிகளில் செயற்பட்டு அற்பசொற்ப சலுகைகளைப் பெற்றவர்கள் இம்முறையும் அவ்வாறு செயற்படாது தமிழர் ஒற்றுமைக்காகப் பங்களிக்க வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள சூழலில் நடைபெறும் இத்தேர்தலில் தமிழ் மக்கள் தமது வாக்குப்பலத்தை எவ்வாறு பிரயோகிக்கப் போகின்றார்கள் என்பதை உலகம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

எனவே தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டுமென்று மக்கள் பொதுமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# லஞ்சம் பெற்ற பிரமுக வங்கி அதிகாரிகள் 20பேர் கைது!

(கொழும்பு)

16 அரச நிறுவனங்களுக்குரிய சுமார் 163 கோடி 37 லட்சம் ரூபா பணத்தை பிரமுக வங்கியில் வைப்பிலிட்டு அதற்காக 6கோடி ரூபாவை லஞ்சமாகப்பெற்ற பிரமுக வங்கி அதிகாரிகள் 20 பேர் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.இவர்கள் முன்னாள் வங்கி ஊழியர்களாவர். இவர்களை விட கடற்படை அதிகாரி ஜயவர்தனாவும் 1கோடியை வைப்பிலிட்டு 55 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றுள்ளார்.

# தென்மாகாண சபையை கலைக்கும் எண்ணம் தற்போதைக்கு கிடையாது

### –முதலமைச்சர் சிறிசேன

(கொழும்பு)

சிறிலங்காவின் தென்மாகாண சபை முன் கூட்டியே கலைக்கப்பட மாட்டாது என தென்மாகாண முதலமைச்சர் சிறிசேன தெரிவித்துள்ளார்.

தென்மாகாண சபையின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூலை மாதம் 7ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் குறிப்பிட்ட கால எல்லைக்குள் மாகாண சபையை கலைக்க நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என அவர் திட்டவட்டமாக கூறியுள்ளார்.

### -ஆணையாளர் அனுமதியின்றி-

# கூட்டுறவு ஊழியர்களுக்கும் ரூ. 1250 வழங்கப்பணிப்பு

அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 1,250 ரூபா சம்பள அதிகரிப்பு கூட்டுறவுச் சங்கப்பணிப்பாளர்களுக்கும் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதியின்றியே வழங்கலாம்.

வடக்கு- கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் சே. விநாயகலிங்கம் இவ்வாறு அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி 58-2003 இலக்கமிடப்பட்டு கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்ட அறிக்கையில் முதலாம் பந்தியில் இக் கொடுப்பனவு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளரின் அனுமதி பெற்றே வழங்கப்படல் வேண்டும் என்ற வாக்கியம் தவறாகச் சேர்க்கப்பட்டுள்ளது என்று செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்ட புதிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கை சகல மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# முதலீட்டாளர் நடவடிக்கைகளில் முடக்கம் வெளிநாட்டு உதவிகளும் தடைப்பட்டுள்ளன

### அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் ஆதங்கம்

மக்கள் மத்தியில் யுத்தம் பற்றிய பீதி ஏற்பட்டுள்ளது. முதலீட்டாளர்களின் நடவடிக்கைகள் முடங்கிவிட்டன. வெளிநாட்டு உதவிகள் தடைப்பட்டுள்ளன. இந் நிலை தொடர அனுமதிக்கக் கூடாது.இவ்வாறு பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் கூறியுள்ளார். ஐ.தே. கட்சிஏற்படுத்திய சமாதான யுகம் மாறி மீண்டும் போர் அவலம் தலை தூக்க இந்நாட்டின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் எங்கும் வாழும் மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள் என்றும் அவர் ஐ.தே.க. கூட்டங்களில் கூறியுள்ளார்.

# அறுவடை இயந்திர அறிமுகம் — நெற்செய்கையாளருக்கு வரப்பிரசாதம்



வன்னிப் பெருநிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கையினை மேற்கொண்டுவரும் உற்பத்தியாளர்கள் அறுவடை காலங்களில் பல கஷ்டதுன்பங்களுக்கு மத்தியிலேயே அறுவடையினை மேற்கொள்ளவேண்டிய நிலைக்கு ஆளாகி வருகின்றனர்.

அண்மைக்காலத்தில் ஒவ்வொரு காலபோக, சிறுபோக நெற்செய்கையின்போதும் இவ் அவலநிலையினை எதிர்நோக்குவது வழமை.

இதற்கு இன்று முக்கிய காரணியாக ஆளணிப் பற்றாக்குறையே உள்ளது.

இதன் காரணமாக அன்றுதொட்டு இன்றுவரை நெற்செய்கையினையே தமது சொந்த முயற்சியாகமேற்கொண்டு வந்த பல நெற்செய்கையாளர்கள் நெற்செய்கையின் பலனை முழுமையாகப்பெற முடியாத நிலையில் நெற்செய்கையினை விஸ்தரித்துச் செல்வதில் தயக்கமடைவதனை அவதானிக்க முடிகின்றது.

அறுவடைக்காலங்களில் ஏற்பட்டுவரும் ஆளணிப்பற்றாக்குறை காரணமாக குறித்த நேரத்தில் அறுவடையினை மேற்கொள்ள முடியாத நிலையில் காலந்தாழ்த்தி அறுவடையினை மேற்கொள்கின்றமை காரணமாக அவர்கள் பல கஷ்டங்களையும் நஷ்டங்களையும் எதிர்நோக்கி வருவதுடன் பலத்த பொருளாதார இழப்பினையும் சந்திக்க நேர்டுகின்றது.

இந்நிலையில் நெற்செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளின் இன்னல்களைப் போக்கும் வகையில் வன்னி வேளாண் சேவையினர் தற்போது புதிய நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நடவடிக்கையின் காரணமாக மேற்படி நெற்செய்கையாளர்கள் அறுவடைக் காலங்களில் எதிர்நோக்கி வந்த பிரச்சினைகள் வெகுவாகக் குறைந்துள்ளமையினை தற்போது மேற்கொள்ளப் பெற்றுவரும் காலபோக அறுவடையின் போது காணக்கூடியதாகவுள்ளது.

அதாவது ஒருநாளில் குறைந்தது இரண்டரை ஏக்கர் வயலினை அறுவடை செய்யக்கூடிய அறுவடை இயந்திரத்தினை (அரிவிவெட்டும் பொறி) வன்னிவேளாண் சேவையினர் கொள்வனவு செய்து விநியோகித்து வருகின்றனர்.

வன்னிவாழ் நெற்செய்கையாளர்களின் நலன்கருதி வங்கிக்கடன் வசதி மூலம் மேற்படி பொறியினை நெற்செய்கையாளர்களுக்கு வழங்கி வருவதன் காரணமாக நெற்செய்கையாளர்கள் பெரும் நன்மையுடைய வழிசமைக்கப் பெற்றுள்ளது. இலகுவான வங்கிக்கடன் அடிப்படையில் வன்னிவேளாண் சேவையினர் மேற்படி அரிவிவெட்டும் பொறியினைக் கொள்வனவு செய்து வன்னிவாழ் நெற்செய்கையாளர்களுக்கு விநியோகித்து வருவதன் காரணமாக குறித்த காலப்பகுதியில் நெற்செய்கையாளர்கள் அறுவடையினை மேற்கொள்ளக்கூடிய ஏதுநிலை தோன்றியுள்ளது.

இதன் பொருட்டு ஆளணிஇல்லாது குறித்த நேரத்தில் அறுவடையினை மேற்கொள்ள முடியாது கவலையுற்று வந்த நெற்செய்கையாளர்கள் இன்று பெரும் நன்மையடைந்துள்ளனர் இதன்காரணமாக சாதாரண குறிப்பிட்ட நெற்செய்கையாளர் முதல் சகல நெற்செய்கையாளர்களுக்கும் பாரிய நன்மையினை வன்னிவேளாண் சேவையினர் மேற்கொண்டுள்ளதுடன் நெற்செய்கையினை ஊக்குவிக்கவும் வழி சமைத்துள்ளனர் என்றே கூறலாம்.

- கனகபுரச்சோதி

# 31ம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



மலர்வு 10 . 10 . 1979

உதிர்வு 14 . 01 . 2004

**சரவணபவன் சஞ்சீபன்**

"எமதன்புப் பாசக் குழந்தையே! உங்கள் பிரிவை நாம் இன்னும் நம்பவில்லை. கனடாவில் வாழ்ந்து கொண்டிருப்பதென்ற நினைவுடனே உள்ளோம். புழுவாய்த் துடிதுடிக்கும் எமது துயரை எப்போது நீ தீர்ப்பாய்"

எமது குழந்தையின் பிரிவுச்செய்தியறிந்து நேரிலும் பல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும், இறுதி யாத்திரையில் கலந்துகொண்ட நேச நெஞ்சங்களுக்கும், இதயம் நிறைந்த நன்றிகளை அள்ளி வழங்குகின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் நிகழ்வுகள் புதுக்குடியிருப்பு இல்லத்தில் 13.02.2004 வெள்ளியன்று இடம்பெறவுள்ளன. அந்நிகழ்வுகளிலும் பகல் 12.00மணிக்கு இடம்பெறவுள்ள மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு நேசக்கரம் நீட்டி அழைக்கின்றோம்.

4ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

துயருறும்
சரவணபவன் குடும்பத்தினர்.

(தி-7149)

# ஆசிரிய சேவையின் 1-ம் வகுப்பு பதவி உயர்வு இவ்வருட சுற்றறிக்கையிலும் புறக்கணிப்பு

### -கல்வித்துறை தொழில்சார் நிபுணர்கள் சங்கம் விசனம்

(கொழும்பு)

ஒன்பது வருடங்களுக்கு மேலாக அதிகாரிகளின் அசமந்தப் போக்குக் காரணமாக ஆசிரியர் சேவையின் முதலாம் வகுப்பிற்கான பதவி உயர்வுகள் அண்மையில் வெளியான 2004/01 இலக்கச் சுற்றறிக்கையிலும் கூடப் புறக்கணிக்கப்பட்டிருப்பது பெரும் அதிருப்தியைத் தந்துள்ளது. மேற்படி பதவி உயர்வின் நிமித்தம் எதிர்காலத்தில் பரீட்சை நடத்தப்படுமென்று அதிகாரிகள் கூறுவது பழையபல்லவியேதவிர வேறில்லை.

இவ்வாறு கல்வித்துறை தொழில்சார் நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பதவியுயர்வு பெறாமல் ஓய்வு பெற்றவர்கள், இறந்தோர் மற்றும் இன்னும் ஓரிரு நாட்களில் ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட இழப்பு எந்தவிதமான பரீட்சை நடத்துவதாலும் ஈடுசெய்யப்பட முடியாதது.

இவையனைத்திற்கும் மூலகாரணம் கல்வி அதிகாரிகளின் முக்கியமாக கல்வியமைச்சின் ஆசிரிய நிறுவனகிளையில் காணப்படும் அசட்டையான செயற்பாடுகளாகும்.

முரண்பாடுகள் உள்ள பீ.சி.பெரேரா சம்பளப் பிரச்சினைக்கு இன்னும் தீர்வில்லை. இந்நிலையில் மேலும் ஆசிரியர்கள் பாராவிருக்கத் தயாரில்லை.

ஆகவே இது சம்பந்தமாக அதிகாரிகள் நடவடிக்கை உடன் எடுக்காவிடில் கடும் தொழிற்சங்கப் போராட்டத்தில் இறங்கவுள்ளதாக கடந்த ஏழாம் திகதி கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடும் போது பாடசாலைகளில் ஏற்படும் குழப்ப நிலைக்கு நாங்கள் பொறுப்பல்ல என்பதையும் பிரச்சினைக்குத் தீர்வு காணாத அதிகாரிகளே அதற்குப் பொறுப்பு என்பதையும் முன்னரே அறிவித்துக் கொள்ள விரும்புவதாகவும் தொழில்சார் நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# உள்வாரிப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு சம்பளம் நிறுத்தம்

### -கல்வியமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

ஆசிரியர்கள் சேவையிலிருக்கும்போது பல்கலைக்கழகங்களில் உள்வாரிப் பட்டப்படிப்பினை மேற்கொண்டு பட்டதாரியானால் அவர்களுக்கு 2005ஆம் ஆண்டிலிருந்து பட்டதாரிகளுக்கான சம்பளம் வழங்க முடியாது எனக் கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

சேவையில் இருக்கும் போது உள்வாரிப் பட்டப்படிப்பினை மேற்கொள்வது எவ்வாறு என்ற கேள்வி அமைச்சுக்குப் பெரும் பிரச்சினையாக இருந்ததுடன், பெரும்பாலான ஆசிரியர்கள் உள்வாரிப் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கு விடுமுறை பெறாமல் இருந்துள்ளார்கள். இது எவ்வாறு சாத்தியம் இந்நடவடிக்கையும் அமைச்சின் கவனத்துக்கு வந்துள்ளதாகவும், இவ் ஆசிரியர்கள் சம்பந்தமாக கூடுதலான நெருக்கடிகளுக்கு அமைச்சு முகம்கொடுத்து வருவதாகவும் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர் கூறியுள்ளார்.

# அரசியல் சூழல் நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கிவிட்டது!

## –பொருளியல் வல்லுநர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**தற்போதைய அரசியல் சூழ்நிலை நாட்டின் பொருளாதாரத்தின் மீது உடனடியாகவும், எதிர்மறையாகவும் தாக்கத்தை ஏற்படுத்தத்தொடங்கிவிட்டது என்று பொருளியல் வல்லுநர்கள் கூறியுள்ளார்கள்.**

டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியும் சில தினங்களில் கணிசமான அளவு வீழ்ச்சி அடையத் தொடங்கியுள்ளது.

வெளிநாட்டு நேரடி முதலீடுகள், மற்றும் உதவிகள் அடுத்துவரும் மாதங்களில் பணப்புழக்கத்திற்கு நெருக்கடியான நிலைகளை ஏற்படுத்தவுள்ளது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் திடீர்மாற்றங்களுக்கு உடனடியாகவே நம்பிக்கையீனத்தை வர்த்தக சமூகம் வெளிப்படுத்தி யுள்ளது. அத்துடன் பங்குச் சந்தையும் பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி மட்டும் பங்குச் சந்தையில் இருந்து 3127 கோடி ரூபாவினை முதலீட்டாளர்கள் மீளப்பெற்றுக் கொண்டுள்ளதாக அரசாங்கப் பேச்சாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

1994ஆம் ஆண்டில் இத்தகையதொரு நிலை ஏற்பட்டிருந்தது. அதேபோல் தற்போது மீண்டும் பங்குச் சந்தை வீழ்ச்சி காண ஆரம்பித்துள்ளமை தெரிந்ததே. சமாதான முயற்சியில் ஏதாவது பாதிப்பு ஏற்படுமானால் முதலீடும் வராது. பொருளாதார வளர்ச்சி மந்தநிலை அடையும், வருமானம் பாதிப்படையும், பொருளாதாரம் பாதிப்படையும் என்பதில்தான் எல்லாமே தங்கியுள்ளது என்றும் பொருளியல் வல்லுநர்கள் எச்சரிக்கை செய்துளளார்கள்.

## விக்கிரகங்கள் திருட்டு

கடந்த காலங்களில் யுத்த அனர்த்தங்களால் சேதமாக்கப்பட்டு தற்போது புனர் நிர்மாண வேலைகள் நடைபெற்றுவரும் இணுவில் காரைக்கால் சிவன் கோவிலில் விக்கிரகங்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த வியாழனன்று மேற்படி திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## பல்கலை ஊழியர்களின் போராட்டம் முடிந்தது

கடந்த மாதம் ஆரம்பமான யாழ். பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தப்போராட்டம் தமிழீழ கல்விக்கழகத்தினருடனான சந்திப்பையடுத்து கைவிடப்பட்டது. இதன் போது ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றித் தருவதாக நிர்வாகம் கூறியதையடுத்து ஊழியர்கள் தமது போராட்டத்தை நிறுத்திக்கொண்டு பணிக்கு திரும்பியுள்ளனர்.

இதேவேளை இப்பீடத்தில் கலைப்பீடமாணவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. முதலாம் வருடத்துக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் இன்னும் கடந்த வருடமுதலாம் வருடப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவராமையால் மாணவர்கள் பொதுக் கலை, சிறப்புக்கலை தேர்வுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. இதனால் மாணவர்கள் விசனம் அடைந்துள்ளனர்.

## காசநோயாளர் தொகை குடாநாட்டில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் காச நோய்க்குரிய வைத்திய சிகிச்சை வசதிகள் இன்மையால் அங்கு காசநோய்க்குள்ளாவோரின் தொகை அதிகரித்துச்செல்வதாக அறியமுடிகிறது.

கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் சுமார் 220 பேர் மேற்படி நோய்த்தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர். இதேவேளை மயிலிட்டியிலுள்ள காசநோய் வைத்தியசாலை கடந்த 18 வருடங்களாக இராணுவ ஆக்கிரமிப்பிற்குள்ளாகிசெயற்படாமலுள்ளது. இதன் காரணமாகவே யாழ். மாவட்டத்தில் நோய்த்தாக்கத்திற்குள்ளாகுவோரின் தொகை அதிகரித்துள்ளது.

## மூன்று கோரிக்கைகளை ஏற்கும் எந்தக் கட்சியுடனும் இணையத் தயார்

### இ. தொ. காங்கிரசின் நிர். சபை தீர்மானம்

(கொழும்பு)

பெருந்தோட்டத்துறைப் பகுதி வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான பிரதான மூன்று கோரிக்கைகளை ஏற்கும் எந்த ஒரு கட்சியுடனும் இணைந்து இ.தொ. காங்கிரஸ் வரும் தேர்தலில் போட்டியிடும் என அக்கட்சியின் நிர்வாக சபை தீர்மானித்துள்ளது.

அக்கட்சியின் மூன்று கொள்கைகளாவன. தோட்டப்புறகல்வியை மேம்படுத்துதல், குடியிருப்புப்பிரச்சினைக்குத் தீர்வு, இனவிகிதாசாரத்துக் கேற்ப வேலைவாய்ப்பு வழங்குதல் என்பன வாகும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தமது மக்களின் எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே தேர்தலில் நிற்கும் என அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் உட்பட ஒரு குழுவினர் பிரதமரைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர். அச்சந்தர்ப்பத்தில் தோட்டப்புற மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டுள்ளது. இதன்போது அதன் முன்னாள் எம்.பி யோகராஜனும் கலந்துகொண்டுள்ளார்.

இதைவிட மலையக மக்கள் முன்னணித்தலைவர் சந்திரசேகரனும் அன்றையதினம் பிரதமரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதனபோது மலையகக்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்வதன் அவசியம் பற்றி அவர் வலியுறுத்தியுள்ளார்.

## சமகாலக் கருத்தரங்கு

(மல்லாவி)

துணுக்காயில் அனிஞ்சியன் குளம் கிராமசேவையாளர் பிரிவில் முக்கிய சமகாலக் கருத்தரங்கும், நிர்வாகத் தெரிவுக்கூட்டமும் அனிஞ்சியன்குளம் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் கடந்த 05ஆம் திகதி கோட்ட தேசிய எழுச்சிப்பேரவையில் செயலாளர் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் துணுக்காய்பிரதேச செயலாளர் தியாகராசா, முல்லை மாவட்ட பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் அன்பரசி, துணுக்காய் பிரதேச பொறுப்பாளர் தர்மேந்திரா ஆகியோர் உரையாற்றினர்.

இதில் 100 வீட்டுத்திட்ட அமைத்தல் சம்பந்தமாகவும், கிராம அபிவிருத்தி பெண்கள் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்வது எப்படி என்பதும், சமகால அரசியல் சம்பந்தமாகவும் கருத்துரைகளை வழங்கினர். அத்துடன் அனிஞ்சியன் குளம் கிராமத்தில் ஊரக தேசிய எழுச்சிப்பேரவை நிர்வாகக்குழுவிற்கு 09பேரும், 13பேர் கொண்ட மாதர்சங்க தெரிவுகளும் இடம் பெற்றது. அத்துடன் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. இதில் பலர் கலந்து சிறப்பித்தனர். (24)

## அதிகரித்துவரும் குற்றச் செயல்களைத் தடுக்க தேசிய ஆலோசனை மன்றம் அமைப்பு

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்து வருகின்ற குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு தேசியஆலோசனை மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

சனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் இம்மன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. குற்றங்களை ஒழிப்பதற்கு கொள்கைகளை வகுக்கும் போது இம்மன்றம் அரசாங்கத்திற்கும் பொலிசாருக்கும் ஆலோசனை வழங்கும். பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் அரசசார்பற்ற ஸ்தாபனங்களின் தலைவர்கள், புத்திஜீவிகள், வர்த்தகர்கள் ஆகியோரை உள்ளடக்கிய 13 உறுப்பினர்கள் இவ் ஆலோசனை மன்றத்தில் அங்கம் வகிப்பர்.

இதேவேளை குற்றங்களின் கொடூர தன்மையும் செயற்பாட்டு முறைகளும் தீவிரமடைந்து வருவதாக சனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். இக் கூட்டத்தில் மதத்தலைவர்கள், பொலிஸ்மா அதிபர் இந்திராடிசில்வா, மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், அரசசார்பற்ற ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## யாழ்-பருத்தித்துறை வீதி இவ்வாண்டில் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இவ்வாண்டிற்கான நிதிஉதவியில் யாழ்ப்பாணம்-பருத்தித்துறைவீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

நீண்ட காலமாக அபிவிருத்திகள் ஏதும் இன்றி இவ்வீதியின் பெரும்பாலான பகுதிகள் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள மிக நீளமான வீதிகளுள் ஒன்றாகக் காணப்படும் இவ்வீதி போக்குவரத்திற்கு ஏற்ப வீதி அகலமாகக் காணப்படவில்லை. இதனால் இவ்வீதியில் விபத்துக்களும், விபத்துக்களைத் தொடர்ந்த வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

இதனால் மேற்படி வீதியை அகலமாக அபிவிருத்தி செய்வதற்காக ஆசிய அபிவிருத்திவங்கியால் ஒதுக்கப்படும் நிதி பயன்படுத்தப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடபிராந்திய பொறியியலாளர் ஜெ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (33)

## 20,000 தேர்தல் கண்காணிப்பாளர்களை நிறுத்த 'பவ்ரல்' அமைப்பு நடவடிக்கை

(கொழும்பு)

நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலை கண்காணிக்க பவ்ரல் அமைப்பு நூறு வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை அழைக்கவுள்ளது.

பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் கிங்ஸிலி றொட்றிகோ தெரிவிக்கையில், தற்சமயம் 14 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் நாட்டில் இருக்கின்றனர். தேர்தல் கண்காணிப்புத் தொடர்பான விடயங்களை அவர்கள் கடந்த மூன்று மாதங்களாக தயாரித்து வருகின்றனர்.

கடந்த நவம்பர் மாதம்முதல் நிலவும் அரசியல் சூழல் பெருமளவான அரசியல் வன்முறைகள் இடம் பெறுவதற்கான சாத்தியங்களை உருவாக்கிவருகிறது.

இதனால் நாடு முழுவதிலும் இருபதாயிரம் கண்காணிப்பாளர்களை நியமிக்கவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## -'மிலேனியம் சிற்றி'சம்பவத்தில்- தொடர்புபட்ட அதிகாரிக்கு கட்டாய விடுமுறையளிப்பு

மிலேனியம் சிற்றி சுற்றிவளைப்பில் குற்றம்சாட்டப்பட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு நேற்றுமுன்தினம் கட்டாய லீவு வழங்கப்பட்டுள்ளது.

உளவுத்துறை இதனை அறிவித்துள்ளது. சனாதிபதியின் ஆணைக்குழுவும்; உயர்நீதிமன்றமும் இம்முடிவை அங்கீகரித்துள்ளன. பொலிஸ் ஆணைக்குழு தமது விசாரணை அறிக்கையை நேற்று முன்தினம் பொலிஸ்மா அதிபரிடம் கையளித்துள்ளார்.

## நூல் அறிமுகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியாவளாக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய 'நிதர்சனதத்தின் புத்திரர்கள்'- நாடக எழுத்துருக்கள் தொகுப்பு நூல் இயக்கச்சி அரசினர் தமிழ்கலவன் பாடசாலை மண்டபத்தில் இன்று மாலை 2.00 மணியளவில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் திருமதி இ.இராசரத்தினம் தலைமையில் இடமபெறும் இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் பிரதம விருந்தினராகவும், பளைகோட்டக்கல்விப் பணிப்பாளர் க.கைலாயப்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். நூல் அறிமுகவுரையை உதவிக்கல்விப்பணிப்பாளர் பொன்.தில்லைநாதனும் விமர்சன உரையை ஆசிரியர் இ.கோகுலராகவனும் ஆற்றுவர்.

## பொலிஸ் சார்ஜன்டை தாக்கிய 5 பொலிசார் இடைநிறுத்தம்!

பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரைத் தாக்கி காயப்படுத்திய சம்பவம் தொடர்பாக ஹொரணை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஐந்து பொலிசார் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இத் தாக்குதல் சம்பவம் சனிக்கிழமை ஹொரணை பொலிஸ் நிலையத்தருகே நடந்துள்ளது.

## கட்டுத்துவக்கு வெடிப்புகளால் பாதிப்புறுவோர் அதிகரிப்பு!

கட்டுத்துவக்கு வெடிகளுக்கு இலக்காகிப்பாதிக்கப்படுவோர் தொகை மாத்தளை மாவட்டத்தில் அதிகரித்து வருவதாக மாத்தளைப் பொலிசார் கூறியுள்ளார்கள்.

லக்கல,தம்புள்ள,கலேவெல போன்ற பகுதிகளிலேயே இத்தகைய சம்பவங்கள் கூடுதலாக இடம்பெற்று வருவதாகவும், அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

2003 ஆம் ஆண்டில் மாத்திரம் இரண்டு பெண்கள் உட்பட 36 பேர் கட்டுத்துவக்கு வெடியால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தவருடம் தற்போது மட்டும் இரண்டுபேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இறைச்சிக்காகவும், விவசாயப் பயிர்களைக் காப்பாற்றுவதற்காகவும் கட்டப்படும் கட்டுத்துவக்குகளுக்கு உரிமை கோருவோர் எவரும் இல்லாமையால் இத்தகைய நடவடிக்கைக்கு எதிராக எதுவும் செய்யமுடியாதுள்ளது என்றும் மாத்தளைப் பொலிசார் கூறியுள்ளார்கள்.

## இல்லமெய்வன்மைப் போட்டியில் இலக்குமி இல்லம் முதலிடம்

(மல்லாவி)

மு/யோகபுர மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அதிபர் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு இடம் பெற்றது.

மங்கல விளக்கினை துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரம் வடமராட்சிக் கல்விக்கழக பொறுப்பாளர் தாயகம், ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை துணுக்காய் பிரதேசப் பொறுப்பாளர் த.தர்மேந்திரா ஏற்றிவைத்தார்.

நிகழ்வில் கிராம சேவையாளர்கள், மல்லாவி மருத்துவமனை வைத்தியர் திருமதி ஏகம்பரமூர்த்தி, ஏனைய பாடசாலை ஆசிரியர்கள் அதிபர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இப்போட்டியில் சிவப்பு நிறமுடையஇலக்குமி இல்லம் 1ஆம் இடத்தையும்,தொடர்ந்து பச்சை நிறமுடைய பார்வதி இல்லமும் மஞ்சள் நிறமுடைய சரஸ்வதி இல்லமும் 2ஆம்,3ஆம் இடங்களைப் பெற்றன. இறுதியாக மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (24)

# வடக்கு கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.**
**கடன் இலக்கம் - 1846 - ஸ்ரீ (எஸ்.என்)**

## முல்லைத்தீவு மாவட்டத்தில் சமூக மீளமைப்பு உப திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பங்கு தாரராவதற்கான அரச சார்பற்ற நிறுவனங்களின்

# (என்.ஜீ.ஓ) விருப்ப வெளிப்பாடு பற்றிய அழைப்பு

வடக்கு கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வடகிழக்கின் இனமுரண்பாட்டினால் மக்களின் குறிப்பாக உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளான நிவாரணம், புனரமைப்பு வேலைகளுக்கும் மேலும் வலுவூட்டி பங்களிப்புச் செய்வதே இத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் வட கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரசாங்கத்திணைக்களங்களின் உதவியுடன் (அரச திணைக்களங்கள், திட்டவெளிக்கள உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களினாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல்படுத்தப்படும். இந்த சமூக அபிவிருத்தி உபதிட்டங்கள் சமூகத்தை மையமாகக்கொண்ட சமூகத்தவர்களின் பூரண பங்களிப்போடு செயற்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தை திட்மிடுவதிலும், அமுல் நடத்துவதிலும் இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளை கண்காணிப்பதிலும் முற்றாக பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்தவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தை அமுல்நடத்துவதற்காக சில கிராமங்கள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பொறுத்து மேலும் பல கிராமங்கள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

ஆரம்ப கட்டமாக பின்வரும் கிராமங்களில் இனங்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்கு தயார் படுத்துவதற்கும், வளங்களை ஒன்று படுத்துவதற்கும், நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்குக் கிழக்கில் திட்டங்களை செயற்படுத்தும் தகுதி வாய்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| மாவட்டம் | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | கிராமம் |
|---|---|---|
| முல்லைத்தீவு | புதுக்குடியிருப்பு | குரவில் |
| முல்லைத்தீவு | ஒட்டுசுட்டான் | ஒதியமலை |
| முல்லைத்தீவு | ஒட்டுசுட்டான் | பெரியகுளம் |
| முல்லைத்தீவு | துணுக்காய் | நயனன்குளம் |
| முல்லைத்தீவு | கரைதுறைப்பற்று | செம்மலை/செம்மலைமேற்கு |

ஆர்வமுடைய அரசசார்பற்ற நிறுவனம் இதுபற்றி மேலதிக விபரங்களை வேலை நாட்களில் காலை 9.30 மணிதொடக்கம் மாலை 3.30வரை மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபரிடம் இருந்து (முல்லைத்தீவு மாவட்டம், தொலைபேசி 024-2222402, தொலைநகல் 024-2220592) பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல் நடத்த விரும்பும் தகுதிவாய்ந்த அரசசார்பற்ற நிறுவனம் தங்களுடைய விருப்பத் தெரிவை மாவட்டச் செயலாளருக்கு/ அரசாங்க அதிபருக்கு 05.03.2004 மாலை 3.00 மணிக்கு முன்பதாக தெரிவிக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்துக்கும் விருப்பத் தெரிவு வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விருப்பத் தெரிவை அறிவிக்கும் பொழுது பின்வரும் விபரங்களை அது உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

01.விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விபரங்கள், நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், சட்டரீதியான பதிவு செய்த விபரங்கள், ஆளணிகள், நிறுவன ஒழுங்கமைப்பு, கிளைக் காரியாலயம் முதலியன.

02.தொழில்சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையும் நிபுணத்துவம் பெற்ற துறையும்.

03.வடகிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு சமூக மீளமைப்பு வேலைகளில் உள்ள அனுபவம்.

04.விசேடமாக வடகிழக்கில் சமூக ஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறு குழுக்களை உருவாக்கல், சிறிய கடன் நடவடிக்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் உள்ள அனுபவம்.

05. வடகிழக்கில் தற்போது தாங்கள் நடைமுறைப் படுத்தும் வேலை தொகையும், கடந்த 05வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத்திட்டங்களின் விபரங்களையும்.

06.இக் குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.

07.விருப்ப தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும் விண்ணப்பமும் அந்தரங்கமாக பேணிக்காக்கப்படும் என்பதையும் அவைகள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**திருமதி இமெல்டா சுகுமார்**
**மாவட்டச்செயலாளர்/ அரசாங்க அதிபர்**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(சி-8775)

சிந்தனைக்கு



நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் போராட்டமே எமது வாழ்க்கையாகவும், வாழ்க்கையே எமது போராட்டமாகவும் மாறிவிட்டது.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 12-02-2004

## தொடரும் பறிப்புக்கள்

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் தற்பொழுது ஆட்சிப் பொறுப்பிலுள்ள காபந்து அரசாங்கத்திடம் இருந்து மேலும் சில அமைச்சுப் பொறுப்புக்கள் சனாதிபதி சந்திரிகாவினால் பறிக்கப்படவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன கூறியிருப்பதில் ஒன்றும் ஆச்சரியப்படத்தக்க விடயம் எதுவுமில்லை. மைத்திரிபால சிறிசேன சனாதிபதியின் பேச்சாளர் போன்ற தரத்திற்குத் தன்னை உயர்ந்துள்ளதைத் தவிர அவரின் அறிவிப்புக்கள் எதிர்பார்க்கத் தக்கதொன்றே.

அறுதிப்பெரும்பான்மையுடையதொரு அரசாங்கத்தைக் காரணம் எதுவும் வெளிப்படுத்தாமலே தமக்கிருந்த நிறைவேற்று அதிகாரத்தின் அடிப்படையில் கலைத்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க காபந்து அரசாங்கத்திடம் உள்ள அமைச்சுப் பொறுப்புக்கள் சிலவற்றையோ அன்றி அனைத்தையுமோ பறித்தெடுத்தால்கூட, எந்தவகையில் அது ஆச்சரியத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

அதற்கு முன்னதாக–அதாவது பாராளுமன்றம் கலைக்கப்படும் முன்னதாகவே– மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களைப் பறித்தெடுத்தவர் சனாதிபதி சந்திரிகா. அவர் காபந்து அரசாங்கத்திடம் உள்ள அமைச்சுக்களைப் பறிப்பதென்பது ஒன்றும் பெரியதொரு விடயமல்ல. அவரது தேவைகள், நோக்கங்கள் கருதி தேவையான அமைச்சுக்களைப் பறித்தெடுக்க அவரால் முடியும்.

சனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத்தைக் கலைத்தபோதே அவர் காபந்து அரசாங்கமான ஐ.தே.முன்னணி அரசாங்கத்தைத் தொடர அனுமதிப்பாரா அன்றி புதியதொரு காபந்து அரசாங்கத்தை உருவாக்குவாரா என்ற கேள்வி பலமாக இருக்கவே செய்தது. ஏனெனில் சனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தின் அடிப்படையில் புதிய காபந்து அரசாங்கத்தையும் அமைத்திருக்கலாம்.

அதாவது ஐ.தே.முன்னணி அரசாங்கம் கலைக்கப்பட்ட பின்னர் அவர் பொதுசன ஐக்கிய முன்னணியினரைச் சில அமைச்சுப் பொறுப்புக்களுக்கு நியமித்தது போன்று– காபந்து அரசாங்கத்தையும் உருவாக்கியிருக்கலாம். ஆனால் அவ்வாறு அவர் செல்லாமைக்குக் காரணம் சிறிலங்காவில் சர்வாதிகார ஆட்சி நடைபெறுகின்றதோ என்றதொரு தோற்றப்பாடு சர்வதேச ரீதியில் உருவாவதோடு அது தமக்குப் பாதகமானதாகிவிடுமோ என்ற ஐயப்பாட்டினாலேயே ஆகும்.

இதனால், ஒரேடியாகக் காபந்து அரசாங்கத்தைத் தன்வசப்படுத்த விரும்பாத சனாதிபதி சந்திரிகா படிப்படியாக காபந்து அரசாங்கத்தை/ அமைச்சரவையைத் தன்வசப்படுத்தும் நோக்கம் கொண்டதே, தற்பொழுது மேலும் சில அமைச்சுப் பொறுப்புக்களை கையேற்பதற்கு மேற்கொண்டுள்ள முயற்சியாகும்.

இவ்வாறு அவர் அமைச்சுப் பொறுப்புக்களைக் கையேற்பதானது அதிகாரத்திற்கானதாக மட்டுமல்ல, ஒரு புறத்தில் அரசியல் பழிவாங்கலுக்கானதாகவும், மறுபுறத்தில் வளமுள்ள அமைச்சுக்களைப் பொறுப்பேற்பதன் மூலம் எதிர்வரும் பொதுத்தேர்தலில் அவ் அமைச்சின் வளங்களைத் தமது ஆட்சியின் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற நோக்கிலானதுமாகும்.

இதேவேளை பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் தேர்தல் ஒன்றிற்குச் செலவுசெய்ய சுதந்திரக்கட்சியிடம் நிதி இல்லை எனச் சனாதிபதி சந்திரிகா தெரிவித்திருந்தமையும் இங்கு கவனத்திற்கொள்ளத்தக்கது. அதாவது கட்சியிடம் தேர்தலுக்கான நிதியில்லாதபோது அதனை அரசிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே சனாதிபதி சந்திரிகா காபந்து அரசாங்கத்திடம் இருந்தும் சில அமைச்சுப் பொறுப்புக்களைப் பொறுப்பேற்கத் தயாராகி வருகின்றார்.

சனாதிபதி சந்திரிகா இத் தேர்தலின் போது அரசவளங்களைத் தமது தேர்தல் வெற்றிக்காகப் பெரியளவில் பயன்படுத்துவார் என்பது எதிர்பார்க்கத்தக்கதே. கடந்த தேர்தல்களின்போதும் அவர் இவ்வாறு வளங்களை முழு அளவில் பயன்படுத்தியுள்ளார். அத்தோடு, அரச வளங்களைப் பயன்படுத்தி அவரது கட்சி பெரும் தேர்தல் மோசடிகள் மற்றும் வன்முறைகளுக்கும் காரணமாக இருந்துள்ளது என்பது வெளிப்படையானது.

ஒட்டு மொத்தத்தில் பார்த்தால் அரச அதிகாரம் அரச நிதி, அரசபலம் என்பனவற்றை ஒன்று திரட்டி எதிர்வரும் பொதுத் தேர்தலை எதிர்கொள்ள சனாதிபதி சந்திரிகா முற்பட்டுள்ளார் எனலாம். இதற்கு எதிரான எந்தவொரு எதிர்ப்பையும், ஆட்சேபத்தையும் அவர் பொருட்படுத்தாமல் போகலாம். அதாவது சனாதிபதியிடம் காணப்படும் அதிகார வெறிக்கு முன்னால் சனநாயகம், மனித உரிமைகள் என்பவையெல்லாம் இரண்டாம் பட்சமானவையே ஆகும். இதேவேளை காபந்து அரசாங்கத்தில் பறிக்கப்படப்போகும் அமைச்சுப் பதவிகள் எவையெவை என்பதை அமைச்சுக்கள் கொண்டுள்ள வளத்தைப் பொறுத்தும் சனாதிபதி சந்திரிகா தமது பரமவைரிகளாக யார் யாரை என்பதைப் பொறுத்ததாகவும் அமையும்.

ஆனால், மூன்று அமைச்சுப் பொறுப்புக்களைப் பறித்தெடுத்தபோதும், அரசாங்கத்தைக் கலைத்தபோதும் மக்களை ஒன்று திரட்டி எதிர்ப்பைக் காட்டாத பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காபந்து அமைச்சுக்கள் பறிக்கப்படும்போதும் பார்வையாளராக இருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

# சனாதிபதி அனைத்தையும் குழப்பிவிட்டார் யுத்தத்தை தொடர்வதே கூட்டமைப்பின் நோக்கம்

### - வாசுதேவ நாணயக்கார கண்டனம்

(கொழும்பு)

சமாதான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான இணக்கப்பாடு கட்டி எழுப்பப்பட்டுக் கொண்டிருந்த வேளை சனாதிபதி பாராளு மன்றத்தைக் கலைத்து அனைத்தையும் குழப்பி விட்டார் என்று சனநாயக இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்; சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான கூட்டமைப்பு யுத்தத்தை தழுவும் நிலைப்பாட்டில் இருந்து தெளிவாகின்றது.

இந்தக் கூட்டமைப்பிற்கு அதிக பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்காகவே இந்தத் தேர்தல் நடத்தப்படுகின்றது.

இது தேர்தலினால் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஏற்படும் அசௌகரியங்கள் ஏராளம். ஐக்கிய தேசியக் கட்சியினால் விரக்திக்குள்ளானவர்கள் அதிகம் இருக்கின்றனர். ஆனால் இவர்கள் புதிய கூட்டமைப்பை ஆதரிப்பார்கள் என்று கூற முடியாது என்றும் கூறப்பட்டுள்ளது.

# சு.க.வின் 15 தொகுதி அமைப்பாளர்களை பதவியிலிருந்து அகற்ற சனாதிபதி முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து சுமார் 15 பேரை சனாதிபதி சந்திரிகா நீக்கி விடத் தீர்மானித்திருப்பதாக அறிய வருகிறது. இவர்கள் மீது மக்களின் செல்வாக்கு குறைந்துள்ளதே இதற்குக் காரணமாக கூறப்படுகிறது.

இவர்களுக்குப் பதிலாக இளைஞர்களை நியமிக்கப்படவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அமைப்பாளர்களிடையே கடந்த காலங்களில் அவர் கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளுக்கமைய செல்வாக்கற்றவர்களை நீக்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் செயலர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பலமுள்ள கட்சியாக மாற்றி வெற்றி பெறச் செய்வதே இதன் நோக்கமெனவும் மேற்படி சிறிசேன தெரிவித்துள்ளார்.

# 55 செலூலர் தொலைபேசிகள், ஹெரோயின் வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து மீட்பு!

(கொழும்பு)

வெலிக் கடைச் சிறைச்சாலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 55 செலூலர் தொலைபேசிகளும் 45 ஆயிரம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருட்களும் மீட்கப் பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் ஆமியர்ருக் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று வாரங்களில் மேற்படி சிறைச்சாலை ஆணையாளர் தலைமையிலான விசேட சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது இந்த செலூலர் தொலைபேசிகளும், ஹெரோயின் போதைப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலை ஆணையாளர் மீது விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தலையடுத்தே இந்த விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை சிறைச்சாலைக்குள் இவ்வாறு செலூலர் தொலை பேசிகள், ஹெரோயின் போதைப் பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை ஆச்சரியத்திற்குரிய விடயமாகும் என்றும் இது சிறைச்சாலையின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக உள்ளது என்றும் சிறைச்சாலை வட்டாரங்கள் கூறுகின்றன.

# பொலிஸ் பாதுகாப்பு திடீரெனக் குறைப்பு மத்திய மாகாண முதல்வர் கண்டனம்

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து உள்ளூராட்சி மாகாண சபைகள் மற்றும் உள்நாட்ட லுவல்கள் அமைச்சர் அலிக் அலுவிகார, பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப் பட்டதை ஆட்சேபித்து மத்திய மாகாண முதலமைச்சர் வஸந்த அலுவிகார மத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் மெதி வக்கவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தனது சகோதரரான பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகாரவுக்கு ஏற்கனவே மரண அச்சுறுத்தல்கள் இருந்து வருவதாகவும் இந்நிலையில் பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்டிருந்த பொலிசாரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தியிருப்பது ஆட்சேபனைக்குரியது என்றும் குறிப்பிட்டுள்ள அவர் இந்நடவடிக்கை காரணமாக தமது பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளதாக கவலை தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.க.வின் தேர்தல் பிரச்சாரம் பெப்ரவரி 26இல் ஆரம்பம்

(கொழும்பு)

ஐ.தே. கட்சியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் கண்டி நகரில் ஆரம்பமாகும். அதன்படி அதன் முதலாவது வைபவ ரீதியான இக் கூட்டத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் எதிர்வரும் 26ஆம் திகதி நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் நடைபெறும் கூட்டங்களும் மாவட்டரீதியாக ரணிலின் தலைமையில் நடைபெறவுள்ளது.

## டைசன் பிரவேசம்

அமெரிக்காவின் முன்னாள் அதிபாரக் குத்துச் சண்டை வீரரான மைக்டைசன் மீண்டும் போட்டிகளில் பங்குபற்றவுள்ளார் என்பதை அவரது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இவர் பங்கேற்கும் போட்டி எதிர்வரும் மே அல்லது யூன் மாதத்தில் நடைபெறும் இதில் பிங் கலுடன் அவர் மோதுவார். கடந்த பெப்ரவரியில் நடந்த போட்டியில் எடினை, டைசன் தோற்கடித்தார். அதன்பின்னர் இதுவரை போட்டி களில் பங்கேற்காமல் இருந்தார்.

# தென்னாபிரிக்க வீரர்கள் தரப்படுத்தலில் முன்னணி

கூர்ப்பர்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள அண்மைய தகவலின்படி ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் பந்துவீச்சிலும், துடுப்பாட்டத்திலும் தென்னாபிரிக்க வீரர்கள் முன்னணி வகிக்கின்றனர்.

துடுப்பாட்டத்தில் அவ்வணியின் கலீஸ் 816 புள்ளிகளையும் பந்து வீச்சில் பொலக் 922 புள்ளிகளையும் பெற்று முதலிடம் வகிக்கின்றனர். துடுப்பாட்டத்தில் 2வது இடத்தை 815 அடம் கில் கிரிட் டும் (அவுஸ்திரேலியா) 3வது, 4வது இடங்களை முறையே கிறிஸ் கெய் ல் ஸ் (மே.இந் தியதீவு) டெண்டுல்கார்(இந்தியா) ஆகியோர் பெற்றுள்ளனர். பந்து வீச்சில் 2ஆம், 3ஆம் இடங்களை முறையே முத்தையா முரளிதரன் (சிறிலங்கா) (911), சமிந்தவாஸ் (836) சிறிலங்கா) ஆகியோர் தட்டியுள்ளனர்.

# ஷேன் வோர்ன் மீண்டும் களத்தில்

தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தை பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கிரிக்கெட் விளையாடுவதில் இருந்து ஒருவருட காலம் தடைவிதிக்கப்பட்டிருந்த அவுஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் (வயது34) நேற்று முன் தினம் மீண்டும் போட்டியில் கலந்து கொண்டார்.

குயின்லண்ட்ஸ் அணிக்கெதிராக விக்ரோரியா அணியின் சார்பில் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் அவர் நேற்று முன்தினம் பங்குகொண்டார்.

இதேவேளை இம் மாதம் சிறிலங்கா வரும் அவுஸ்திரேலிய அணியில் ஷேன் வோர்ன் இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



# மக்கள் நிராகரித்த கதிர்காமர், ஜெயரட்ணவை அமைச்சர்களாக்கியது சனநாயக விரோதச் செயல்

## -எஸ்.பி. திஸாநாயக்க கண்டனம்

(கொழும்பு)

2001 ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி மக்களால் நிராகரிக்கப்பட்ட பொ.ஐ.மு. அமைச்சரவை உறுப்பினர்களான லக்ஸ்மன் கதிர்காமர் மற்றும் டி.என்.ஜெயரட்ண ஆகியோரை சனாதிபதி தற்போதைய அமைச்சரவையில் சேர்த்திருப்பது சனநாயக விரோதமான செயல் என எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே சனாதிபதி இதில் தனது அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜே.வி.பியும் பொ.ஐ. முன்னணியும் இணைந்து செயற்படுத்தப்போகும் பொருளாதாரத் திட்டமானது வடகொரியாவில் இருக்கும் பொருளாதாரத் திட்டத்தை மையமாக கொண்டது ஏற்கனவே இத்திட்டம் வடகொரியாவாலேயே உரிய முறையில் செயற்படுத்த முடியாது பொருளாதாரத் தளம்பல் ஏற்பட்டது.

எனவே இவ்வாறாக ஒரு திறந்த பொருளாதாரம் இல்லாது மூடிய பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு பொருளாதாரத்தை தான் பொ.ஐ. முன்னணியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் தங்களது பொருளாதாரக் கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளன.

எனவே அவ்வாறான கொள்கையின் அடிப்படையில் இலங்கையை கட்டியெழுப்புவது சாத்தியம் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்ததைத் தொடர்ந்து எஸ்.பி. திஸாநாயக்க, ரவி கருணாநாயக்க ஆகியோர் நாட்டை விட்டு தப்பிச் சென்று விட்டனர் என்ற ஊடகங்களின் கருத்துக்கு விளக்கமளிக்கும் ஊடக மாநாடு நேற்று கொழும்பில் நடை பெற்ற போது கருத்து தெரிவிக்கும் போதே திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (32)

# த.கூட்டமைப்பு மட்டு.அம்பாறை.திருமலையில் முஸ்லிம் தரப்புடன் இணைந்து போட்டியிடும்

## – செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட தமிழ் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் பிரதிநிதிகளையும் நிறுத்தவுள்ளது என தமிழ் கூட்டமைப்பைச் சேர்ந்த செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மட்டக்களப்பு-அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலேயே கூடுதலான முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளுடன் இணைந்து போட்டியிடப்போவதாக தெரிவித்தார்.

இதற்கான ஏற்பாடுகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளும் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# "நாற்று" பெண்கள் சமூக இதழ்-23 வெளிவந்துள்ளது

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனத்தின் "நாற்று" பெண்கள் சமூக இதழ் 23 வெளிவந்துள்ளது.

மாற்றப்பட வேண்டியவை மனங்களே, பெண்ணேஉண்நிலை, குடும்பப் பிளவுகளும் பாதிப்புகளும் என்னும் ஆக்கங்களுடன் மற்றும் பல்வேறு பட்ட ஆக்கங்களையும் தாங்கி நாற்று இதழ் 23 வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ரவிராஜிற்குப் பதில் அரவிந்தன், முத்துலிங்கம் ஆனந்தசங்கரி கூட்டமைப்பிடம் கோரிக்கை?

(கொழும்பு)

தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் தெரிவில் ரவிராஜை விலக்கிவிட்டு அரவிந்தனையும் மற்றும் முத்துலிங்கத்தையும் சேர்த்துக் கொள்ளுமாறு கூட்டமைப்பை ஆனந்தசங்கரி கேட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரான நிருபம் சென்னைச் சந்தித்த பின்னரே ஆனந்தசங்கரி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதற்கு கூட்டமைப்பு பச்சைக் கொடி காட்டவில்லை என்றும், இதனையடுத்து நேற்று முன்தினமும், நேற்றும் கூடிய கூட்டமைப்பின் கூட்டத்திற்கு ஆனந்த சங்கரி வருகை தரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் வேட்பாளர் தெரிவு, பொதுக் கொள்கை மலையக கட்சிகளையும் இணைத்துக் கொள்ளல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டதோடு, மீண்டும் வரும் 15ஆம் திகதி கூடுவதென்று முடி வெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் மலையக மக்கள் முன்னணி இணைந்து போட்டியிடுவதற்கு விரும்பம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை. அவ்வாறான விருப்பத்துக்கு உடன்பட்டாலும் கூட மேல்மாகாண தமிழ் மக்கள் ஒரு பிராந்திய மக்களாக கருதப்பட்டு அந்த மக்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டால் தாம் இதற்கு ஒத்துழைக்கத் தயார் என மனோகணேசன் தெரிவித்துள்ளார். எனினும், எந்த முடிவை எடுத்தாலும் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்களுடன் கலந்துரையாடிய பின்பே இது தொடர்பாக இறுதி முடிவைத் தாம் எடுப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# பூநகரி திலீபன் மருத்துவமனையில் இன்று பெண்நோயியல் மருத்துவ சேவை

(பூநகரி)

இன்று வியாழக்கிழமை பூநகரி சாமிப்புலம் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் வெளிநாட்டு வைத்திய நிபுணரால் பெண் நோயியல் மருத்துவ சேவை காலை 9.00 முதல் பி.ப.5.00 மணிவரை நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தியாக தீபம் திலீபன் மருத்துவமனை வைத்தியர் நளா செய்துள்ளார்.

# அஸ்கிரிய,மல்வத்த மகாநாயக்கர்களை இந்திய உயர்ஸ்தானிகர் சந்திப்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இந்தியா பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்று சிறிலங்காவில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் அஸ்கிரிய மல்வத்த பீடத்தின் மகாநாயக்கரை நேற்று பகல் சந்தித்தபோதே இந்திய உயர்ஸ்தானிகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது இந்தியத் துணை உயர் ஸ்தானிகர் அச்சந்கே மற்சேந்திராவும் சமுகமளித்திருந்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மகாநாயக்கர் சமாதான செயற்பாடுகள் தற்போது சற்றுப்பின்னடைவை சந்தித்தாலும் அது எதிர்காலத்தில் நல்ல முன்னேற்றம் காணும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# சனாதிபதி- கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று சந்தித்துப் பேச்சு

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் டொன் புறாவ் கொவ்டே சந்தித்து போர் நிறுத்தம் தொடர்பாக உரையாடியுள்ளார்.

சனாதிபதி இல்லத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது: விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்தத்தில் தான் அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாக சனாதிபதி உறுதிமொழி அளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது போர் நிறுத்த உடன்படிக்கை பற்றி பேசப்பட்டது அதன் அமுலாக்கம் பற்றிய விபரங்களை ஆராய்வதற்காக குழு ஒன்றை அமைக்குமாறு சனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்தக் குழு அடிக்கடி தமது பெறுபேறுகளை சனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு விளக்கமளிக்க வேண்டுமெனவும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

### ஐக்கிய...

எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களையும் உடனடியாகப் பொறுப்பேற்குமாறு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு சனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

அதனைவிட அமைச்சர்கள் பலர் தமது அமைப்புக்களில் இருந்து அரசு சொத்துக்களை எடுத்துச் செல்லக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதால் அதனையும் தடுக்குமாறு அமைச்சின் செயலாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (32)

### அமைச்சர்...

வில்லை. மேற்படி கடிதம் சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஒன்று. ஏனெனில், பிரதமருக்கு சமர்ப்பிக்கப்பட்டாலும், தற்போதைக்கு சனாதிபதியே அமைச்சரவையின் தலைவர் என்ற ரீதியில் சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாததால் சனாதிபதியால் அது தொடர்பாக என்ன கருத்துக்களை வெளியிட்டார் என்பது தொடர்பாக செய்தி அச்சுக்குப்போகும் வரை தெரியவரவில்லை.

### ஆனந்த...

இதன் அடிப்படையில் ஆனந்த சங்கரி இல்லாது தமிழர் விடுதலைக் கூட்டணியால் பொதுச்சபைக் கூட்டங்களையோ ஏனைய கூட்டங்களையோ நடத்த முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த மனுவில் செயலாளர் நாயகம் சம்பந்தனும் சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் பிரதி வாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (32)

### சுவிஸ்...

நாட்டு கிளையின் நிதி உதவி யுடன் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களைப் பார்வையிடவுள்ளனர்.

குறித்த வேலைத்திட்டங்களை பார்வையிடும் இவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்திற்குச் சென்று திட்டமிடல் செயலக பணிப்பாளர் தூயவன் அவர்களுடன் கலந்துரையாடலை நடத்துவர். இறுதியாக தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி உள்ளிட்ட குழுவினரை சந்தித்து கலந்துரையாடலை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று காலை கிளிநொச்சியை வந்தடையும் இக் குழுவினர் மேற்குறித்த சந்திப்புக்கள் யாவும் நிறைவு பெற்றதும் உடனடியாகவே கொழும்பு திரும்புவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (லோ)

### வடமராட்சி...

சாட்டப்பட்ட இம் மீனவர்கள் தொடர்பாக அண்மையில் பருத்தித்துறை 524ஆவது படையணி முகாமில் இடம்பெற்ற சந்திப்பின்போது மீனவர் சங்க பிரதிநிதிகளால் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

எனினும். இந்நடவடிக்கை தொடர்பாக படைத் தலைமை எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கப்படாத நிலையில், நேற்றைய தினம் உள்ளூர் மீனவர்கள் இவர்களை பிடித்திருந்தனர். இவ்வாறு பிடிக்கப்பட்ட தமிழ்நாடு நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 11 மீனவர்களுடன் கரை திரும்பிய உள்ளூர் மீனவர்கள் நால்வர் மீது கரையோரக் காவல் கடமையில் இருந்த படையினர் மோசமான தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், கோபமுற்ற நூற்றுக் கணக்கான பொதுமக்கள் படையினருடன் தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனையடுத்து அப்பகுதிக்கு விஜயம் செய்த படை உயரதிகாரிகள் குழுவினர் மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்தியதை அடுத்து மேற்படி பிடிக்கப்பட்ட 11 மீனவர்களையும் பருத்தித்துறை பொலிசார் கைது செய்து நேற்று நள்ளிரவு 12 மணிக்கு பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இதேவேளை, உள்ளூர் மீனவர்கள் மீது இடம்பெற்ற தாக்குதல் காரணமாக இவ்வாறு பிடிக்கப்பட்ட மேலும் நான்கு மீன்பிடிப்படகு களும் மீனவர்களும் கடலில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இன்று காலை நான்கிற்கு மேற்பட்ட மீன்பிடிப் படகுகளும இந்திய மீனவர்களும் கரைக்கு அழைத்து வரப்படலாம் என மீனவ சங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(27)


## சாவு அறிவித்தல்

### திருமதி. விநாயகம் பாக்கியம்

பருத்தித்துறை சுப்பர் மடத்தைச் சொந்த வசிப்பிடமாகவும் புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரம், இரணைப்பாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகம் பாக்கியம் 11.02.2004 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் விநாயகம் அவர்களின் மனைவியும் இராஜேஸ்வரி (சுப்பர் மடம்) இராசலட்சுமி (சுப்பர் மடம்) புவனேஸ்வரி (இந்தியா), இராசேந்திரம் (புதுக்குடியிருப்பு தமிழரசி நகைமாடம்), இரஞ்சிதமலர் (இந்தியா), தேவஈஸ்வரி (லண்டன்), விஜய நிர்மலா (மாத்தளன்), இராசகுமார் (சோழமறவன் போராளி) ஆகியோரின் தாயாரும், காராளசிங்கம் (சுப்பர்மடம்), நாகராசா(சுப்பர் மடம்), மகேஸ்வரன் (இந்தியா), கமலாதேவி (புதுக்குடியிருப்பு), சிவமணி (இந்தியா), கதிரமலை (லண்டன்), கலாராசா (மாத்தளன்), காஞ்சனாதேவி (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் மாமியுமாவார். இவரின் ஈமக்கிரியைகள் 12.02.2004 இல் மதியம் 2.00 மணிக்கு இவரது வீட்டில் நடைபெற்று புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:-
இராசேந்திரம் (மகன்)

(3524)



## கண்ணீர் வணக்கம்

2004.02.11 ஆம் நாள் இயற்கை எய்திய தமிழீழ வைப்பக கணக்காய்வாளர் திரு. வி.சோழமறவன் அவர்களின் அன்புத் தாயார்,

### திருமதி.பாக்கியம் விநாயகம்

அவர்களிற்கு எம் கண்ணீர் வணக்கத்தைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பணிப்பாளர், பணியாளர்
தமிழீழ வைப்பகம்.

(சி-8781)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.